1987 நவம்பர் 10]

[பேரவைத் தலைவர்]

கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப்பேரவையின் ஐந்தாவது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (Panel of Chairmen) நியமிக்கிறேன்.

1. திரு. மா. சின்னராசு
2. திரு. பி. என். இராமச்சந்திரன்
3. திரு. கே. குப்புசாமி
4. திரு. செ. செம்மலை
5. திரு. மா. சுந்தரதாஸ்

3. தகவல் கோரல்

இலங்கைப் பிரச்சினை குறித்து

திரு. கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு உங்களிடமும், அவை முன்னவர் அவர்களிடமும், நமது அவைச் செயலாளர் அவர்களிடமும் இலங்கைப் பிரச்சினை பற்றி, இனப் படுகொலை பற்றி அமைதிப்படை அங்கே . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாம அலுவல் ஆய்வுக் குழுவில் பேசியதை இங்கே அவையிலே பேசுவது சரியல்ல. நான் அலுவல் ஆய்வுக் குழுவிலே ஏற்கனவே சொன்னேன்.

I have already disallowed the Adjournment Motion.

(கூச்சல்-குழப்பம்) * *

(முற்பகல் 11-10)

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவில் இச்சட்ட மன்றப் பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருந்த (1) டாக்டர் கே. சமரசம், (2) திரு. த. பழனி, (3) திரு. வி. சுப்பிரமணியன், (4) திரு. செ. செம்மலை, (5) திரு. எம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1987 நவம்பர் 10

[பேரவைத் தலைவர்]

வேணுகோபால், (6) திரு. அ. ரகுமான்கான் ஆகியோரின் பதவிக் காலம் 1987 பிப்ரவரி மாதம் 21 ஆம் தேதியன்று முடிவடைந்து விட்டதால் அப்பேர'வக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து அறுவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு சென்னைப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. பல்கலைக் கழகத்தின் சட்டப்படி ஒற்றை மாற்று வாக்குமூலம் இத்தேர்வு நடைபெறும்.

எனவே வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 13—11—1987 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் பேரவைச் செயலாள ரிடம் சேர்ப்பிக்கவேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 16—11—1987 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 17—11—1987 செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது ஆறுக்கு மேற்படு மாயின், வாக்கெடுப்பு நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப் படும்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

4. தீர்மானம்.

திரு. உ. சுப்பிரமணியன் அவைக்கு வராமைக்கு அனுமதி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து உறுப்பினர் கள் அவைக்கு வராமைக்கு அனுமதி கோரும் தீர்மானம். திரு. சி. பழனிமுத்து. (கூச்சல்--குழப்பம்)

* * * * * *

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.